# மணிமேகலை உணர்த்தும் மனிதநேயம்

**குமரன் சுப்பிரமணியன்**
Jabatan Pengajian India, Universiti Malaya, Kuala Lumpur, Malaysia
இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர், மலேசியா
s.kumaran@um.edu.my

**ஆய்வுச் சுருக்கம்**

இக்கட்டுரை மணிமேகலையில் காணப்படும் மனித நேயம் பற்றிய கருத்துகளை முன்வைக்கின்றது. மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ள, குறிப்பாக, பாத்திரம் பெற்ற காதையில், பசிப்பிணியின் கொடுமைகள் தெளிவாக விளக்கப்பட்டதோடு, அப்பிணியைப் போக்கும் செயல் மேன்மையானது என்றும் வலியுறுத்தி அதன்வழி மனித நேயம் எவ்வாறு வெளிப்படுகின்றது என விவரிக்கப்பட்டுள்ளது. அதேவேளையில், இக்காதையில் பல அறக்கருத்துகள் இன்றைய வாழ்க்கை முறையோடு நெருங்கிய தொடர்பு உள்ளதைக் காண இயலுகிறது. மணிமேகலை வெறும் காலத்தால் அழியாத காப்பியமாகத் திகழாமல், இக்காப்பியத்தில் போதிக்கப்பட்டுள்ள அறக்கருத்துகளும் மனிதநேயக் கருத்துகளும் இன்றும் நாம் அனைவராலும் பின்பற்றக் கூடியதாகவே உள்ளன என வலியுறுத்திக் காட்டுகின்றது இக்கட்டுரை.

**Abstract**

This article presents the humanities ideas that found in the ancient epic, *Manimekalai*. In the this epic, especially in the *paattiram perra kaathai*, the atrocities of the pacifist were clearly explained. It also has touched about and the way in which humanity is manifested and emphasized through the acts of superior pacifism. At the same time, it is possible to see that many of the theories in this epic are closely related to today's way of life. This article stresses that *Manimekalai* is not just an epic that is immortalized by time, but that the principles and humanitarian teachings taught in this epic are still applicable to all of us even today.

Keywords: மணிமேகலை, மனிதநேயம், மனிதகுலத்திற்கான சேவை, தமிழ்k காவியங்கள்
Manimekalai, Humanity, Service to Mankind, Tamil Epics

**முன்னுரை**

மனித வாழ்க்கை என்பது தலைமுறைகள் ஒன்றையொன்று தொடர்ந்துவரும் நெடுங்கதை. மனித இனத்தின் ஒவ்வொரு தலைமுறையும் முந்தைய தலைமுறையைவிட வளர்ச்சி பெற்றதாகவும் உயர்வு பெற்றதாகவும் விளங்க வேண்டும். சமுதாயத்தையும் மனிதனையும் நேர்வழிபடுத்தும் ஒழுக்க நெறியே அறமாகும். அறவழியில் நின்று மாந்தர் யாவரும் தமது கடமைகளைச் சீராக, செம்மையாக நிறைவேற்ற வேண்டும்.

நேயம் என்பது அன்பு. அன்புதான் நாம் வாழ்வதற்கும் பிறரை வாழ்விப்பதற்கும் அடிப்படையான பண்பு. இந்த மனிதப்பிறவி எடுத்ததன் பயன் நாம் பிறரிடம் அன்பு காட்டுவதற்கும் பிறரால் அன்பு காட்டப்படுவதற்கும் தான். அன்பில்லையேல் அகிலமே இல்லை. அதனால் தான் வள்ளுவர் ‘அன்புடையார் எல்லாம் உடையார்’ என்றும் ‘அருளுடையார்க்கு அவ்வுலகம் உண்டு’ என்றும் அறிவுறுத்துகிறார்.

தன்னைப் போல் பிறரையும் நேசித்தல் என்பதே மனிதநேயம். வாடிய பயிரைக் கண்டு அழுத இராமலிங்கரின் மனம் அறம் சார்ந்தது. மனித ஒழுக்கத்தின் மிகச் சிறந்த பண்பே மனிதநேயம். மனிதநேயம் தன்னலம் அற்றது. பிறர் பசித்திருக்க தான் புசிக்காது.

**மணிமேகலை**

மணிமேகலை ஊழ்வினையையும் மறுபிறப்பையும் வலியுறுத்துகிறது. இவ்விரண்டையும் மக்கள் உள்ளத்திலே பதியும்படி உரைப்பதே இக்காப்பியத்தின் நோக்கமாக இருந்தது. பண்டைக் காலத்தில் ஊழையும் மறுப்பிறப்பையும் பல மதங்களும் ஏற்று வலியுறுத்தியதற்கான காரணம், மக்கள் அறநெறி தவறாமல் அன்புநெறியில் வாழவேண்டும் என்பதற்காகவே. மற்றவர்களிடம் அன்புகாட்டி துன்பத்திலிருந்து காப்பது தமது கடமை என்று எண்ணுவர். மக்கள் நல்லொழுக்கத்தைப் பின்பற்றி வாழ்வர். இத்தகைய நல்லொழுக்கத்தை வலியுறுத்தவே ஊழையும் மறுபிறப்பையும் மணிமேகலை அதன் காப்பியப் பாத்திரங்களின் மூலமாக வலியுறுத்துகிறது.

மணிமேகலை கணிகையர் குலத்தில் பிறந்தும் அத்தொழிலை அவள் செய்யவில்லை. சுகபோக வாழ்க்கையை விரும்பாமல் துறவு மேற்கொள்கிறாள். பசியால் வருந்தும் உயிர்களுக்கு உணவளித்துக் காக்கும் உயர்ந்த அறநெறியினைக் கைக்கொண்டாள். மக்களின் பசியைப் போக்குவதற்காக அறவணஅடிகள் என்னும் துறவியிடம் அறிவுரைகேட்டு ஆதிரை என்னும் கற்புக்கரசியிடம் அமுதசுரபியில் முதன்முதலில் பிச்சைபெற்றாள். அன்று முதல் அந்தப் பாத்திரத்தில் அள்ள அள்ள அன்னம் குறையாமல் வந்தது. மணிமேகலை காயசண்டிகை வடிவம் எடுத்து சிறைச்சாலையில் பணிசெய்து சிறைச்சாலையை அறச்சாலையாக்கினாள். சிறையில் மணிமேகலை,

*இளமை நிலையாமை*
*செல்வம் நிலையாமை*
*யாக்கை நிலையாமை*

என்று உலக வாழ்வில் இளைமையோ செல்வமோ நிலையில்லாதவை. வீடுபேறு என்னும் மோட்சத்தை பிள்ளைகளாலும் பெற்றுத்தரமுடியாது. அறம் என்னும் தர்மசிந்தனை ஒன்று மட்டுமே நமக்குச் சிறந்த துணை என்பதை வலியுறுத்துகிறாள் மணிமேகலை. இக்காப்பியத்தில் அறத்துடன் அறம் செய்வோரின் தகுதியும் வரையறுக்கப்படுகிறது.

**பசிப்பிணி போக்குதல்**

மணிமேகலை பௌத்த சமயத்தைப் பரப்ப எழுந்த காப்பியந்தான். ஆயினும், அது கூறும் சமயக் கோட்பாடுகள் மனித சமுதாயத்திற்குப் பொதுவானவை என்பதை மறுக்க இயலாது. உண்மையில் அனைத்துச் சமயங்களின் கோட்பாடுகளும் அப்படித்தான். எனினும், மணிமேகலை பசியின் கொடுமையை விளக்கிப் பசிப்பிணி தீர்ப்பதே விழுத்துணையான அறம் என்று அழுத்தமாகப் பேசுவது மிகச் சிறந்த கோட்பாடாகும். எல்லாச் சமயங்களும் அன்னதானத்தைப் பெரிதும் போற்றுகின்றன. தானத்தில் அன்னதானமே சிறந்தது என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றன; ஏனென்றால், மக்களின் பசியைப் போக்கவில்லை என்றால் மக்கள் மக்களாக இருக்க மாட்டார்கள். இருக்க முடியாது என்பதை நன்கு உணர்ந்திருந்தனர்; அதனால்தான், அன்னதானத்தை முதன்மைப்படுத்தினர்.

பாரதியாரும் பசியைப் பற்றிக் கூறுமிடத்து,

*வயிற்றுக்குச் சோறிட வேண்டும்*
*இங்கு வாழும் மனிதருக் கெல்லாம்*
*பயிற்றிப் பலகல்வி தந்து இப்பாரை*
*உயர்த்திட வேண்டும்* *(முரசு 23)*

என்று பசியைப் போக்குவதற்கே முதலிடம் தருகிறார்.

பசித்தவனுக்கு உணவுதான் கடவுள். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோராவர். உயிர் வளர்க்க ஊன் வளர்க்க வேண்டும். அந்த ஊன் வளர உணவு வேண்டும். இல்லையேல் பசிக்கொடுமை தாளாமல் சமூக விரோதிகளாக மாறுவதற்கான சூழல்தான் உருவாகும். மனிதருக்கு மட்டுமன்றி மற்ற உயிர்களுக்கும் உணவே முதல் தேவையாகிறது. உறுபசி இல்லாத நாடே நல்ல நாடு என்கிறார் வள்ளுவர். உலகம் முறையாகச் செயல்ப பசிப்பிணி முற்றுமாக அகலவேண்டும். அப்போதுதான் சிந்திக்க முடியும். செயலாற்றவும் முடியும். இல்லையேல் மனித வாழ்க்கை விலங்கு வாழ்க்கையாகவே அமைந்துவிடும்.

சமண சமயம் நான்கு வகை தானங்களை வலியுறுத்துகிறது. அவற்றுள் முதன்மையானது அன்னதானமே. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய இராமலிங்கர் (வள்ளலார்) அறச்சாலைகள் அமைத்து, ஏழை எளியவருக்கு உணவிடச் செய்தமையை இங்கு சான்றாகக் கொள்ளலாம்; எனவேதான், சாத்தனார் மணிமேகலை கரங்களில் அமுதசுரபி என்ற பாத்திரத்தைத் தந்து, பசிப்பிணிப் போக்கும் அறச்செயலைச் செய்ததாகக் காப்பியம் படைக்கிறார்.

பொறுக்கும் ஆற்றலுடையோர்க்கு அளிப்பவர்கள் அறத்தை விலை கூறி விற்பவராவர். ஏழைகளின் பசியைப் போக்குவோரிடத்தில்தான் மேலான அறநெறி வாழ்க்கை அமைந்துள்ளது. இந்த உலகில் வாழ்பவருக்கு எல்லாம் உணவு கொடுத்தோரே உயிர் கொடுத்தவராவர்.

*ஆற்றுநர்க்கு அளிப்போர் அறம்விலை பகர்வோர்*
*ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்*

*மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை*
*மண் திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே (பாத்திரம் பெற்ற காதை 92-96)*

என்று பசியைப் போக்குதல் பெரிதும் வலியுறுத்தப்படுகிறது.

*அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்*
*பெற்றான் பொருள்வைப் பழி (குறள் 226)*

இக்குறளில் செல்வம் பெற்றவர்கள் தம் எதிர்காலத்துப் பயனுக்கென அதனைச் சேமித்து வைப்பதற்குரிய நல்ல இடம் பசியால் வாடும் மக்களின் வயிறு என்று வள்ளுவர் கூறுகிறார். இதனை மணிமேகலை இவ்வாறு வலியுறுத்துகிறது,

*பசியும் பிணியும் பகையும் நீங்கி*
*வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி*
*அணிவிழா அறந்தான் (விழா வறைகாதை 70-72)*

ஒரு நாட்டில் முதலாவது களையப்பட வேண்டியது பசி என்பதையும் பசி வந்தால் பத்தும் பறந்துபோகும் என்பதையும் மணிமேகலை

*குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்*
*பிடித்த கல்விப் பெரும்புனை விடூஉம்*
*நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்*
*பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்*
*பசிப்பிணி என்னும் பாவி (பாத்திரம் பெற்ற காதை 76-80)*

என்றும் பசியின் கொடுமையால் மனிதன் அடையும் துன்பத்தை அறிந்து பசியைப் போக்கும் நல்லறத்தை மேற்கொண்டாள் மணிமேகலை. தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் சகத்தினை அழித்திடுவோம் என்றார் பாரதியார். மணிமேகலை மண்தனி ஞாலத்து வருவோருக்கு எல்லாம் உண்டி கொடுத்தார் உயிர்கொடுத்தோரே என்று ஆதரவு அற்றவர், காலில்லார், கண்ணில்லார், காதுகேளாதவர் முதலியோர்க்கு உணவழித்து மனிதநேயத்தோடு அறப்பணியைத் தொடர்ந்தாள்.

**அறம் செய்தல்**

*அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்*
*மறவா திதுகேள், மண்ணுயிர்க் கெல்லாம்*
*உண்டியும் உடையும் உறையுளும் அல்லது*
*கண்டது இல் (ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை 228-230)*

உயிர்களுக்குள் யாதும் வேறுபாடு கருதாது உயிர்கள் யாவும் உண்டி, உடை, உறையுள் ஆகிய இம்மூன்றையும் பெறச்செய்வதே உண்மையான அறம் என்று உணர்த்துகிறது.

இதனையே திருவள்ளுவரும் இவ்வாறு கூறுகிறார்.

*வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்*
*குறியெதிர்ப்பை நீ துடைத்து (குறள் 221)*

இல்லாதவர்களுக்கு வழங்குவதே ஈகைப் பண்பாகும். மற்றவர்களுக்கு வழங்குவது என்பது ஏதோ ஓர் ஆதாயத்தை எதிர்பார்த்து வழங்கப்படுவதாகும். எனவே, பசியால் வாடும் மக்களுக்கு உதவி செய்து நல்லலறத்தை மேற்கொள்ளும் கடமையாகும். இவ்வாறு செய்யப்படும் அறமானது, இவ்வுலகில் நிலைத்து நிற்கும் தன்மையுடையது.

**அன்பு செலுத்துதல்**

அன்பு என்பது நெருக்கமான உள்ளப் பிணைப்பு தொடர்பான ஓர் உணர்வும் அனுபவமும் ஆகும்.

*ஈன்ற குழவி முகங்கண் டிரங்கித்*
*தீம்பால் சுரப்போள் தன்முலை போன்றே*
*நெஞ்சு வழிப்படூ* *(பாத்திரம் பெற்ற காதை 113-115)*

என்ற வரிகளின் வழி, ஈன்ற குழந்தையின் முகம் கண்டு, பெற்ற தாய்க்குப் பால் சுரப்பதைப் போல், பசியால் வாடி, அயர்ந்து, சோர்ந்திருக்கும் வரியோர்களைக் கண்டவுடன் அன்பால் கிரங்கி அமுதசுரபி அமுதத்தைச் சுரக்கும் என மணிமேகலை தீவதிலகையிடம் கூறுகிறாள். இங்கு உயிர்கள் பால் மணிமேகலை கொண்டிருக்கும் அன்பு வெளிப்படுகிறது.

**மூத்தோரை மதித்தல்**

இக்காதையில் மணிமேகலை ஏழு நாட்கள் கழித்து, தீவதிலகையிடம் இருந்து விடைபெற்று தன் தாயையும் செவிலித் தாயையும் சந்தித்து அவர்களது பழம்பிறப்பை விளக்கிக் கூறி, பின் அவர்களது காலில் விழுந்து வணங்குமாறு பாடல் வரிகள் இடம்பெற்றுள்ளன.

*இரவி வன்மன் ஒருபெரு மகளே*
*துர்கத் தானைத் துச்சயன் தேவி*
*அமுத பதிவயிற் றரிதில் தோன்றித்*
*தவ்வைய ராகிய தாரையும் வீரையும்*
*அவ்வைய ராயினீர் நும்மடி தொழுதேன்* *(பாத்திரம் பெற்ற காதை 133-137)*

பெரியோரையும் மூத்தோரையும் மதித்தல் என்பது மனிதநேயக் கொள்கையாகக் கொள்ளவேண்டும் என்பது இக்கால மாந்தருக்கு நினைவூட்ட வேண்டியதொன்றாக உள்ளது.

**வினைக் கோட்பாடு**

மணிமேகலையில் மனித வாழ்வில் வினைக்கோட்பாட்டின் செயல்பாடு குறித்து கூறப்பட்டுள்ளது.

*நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து*
*வித்தி நல்லறம் விளைந்த வதன்பயன்*
*துய்ப்போர் தம்மனைத் துணிச்சித ருடுத்து* *(பாத்திரம் பெற்ற காதை 106-108)*

நாவலந்தீவு எனும் பெரிய தீவில் நல்லறத்தை மேற்கொண்டதால், அதன் விளைவாகப் பெற்ற செல்வத்தை அனுபவிப்பவர்கள் வீடுகளில் மக்கள் பிச்சை எடுக்கின்றனர் என்று சீத்தலை சாத்தனார் கூறுகிறார்.

வினைகள் இருவகைப்படும். அவை நல்வினை, தீவினை என்பனவாகும். உயிர்கள் நல்வினை, தீவினை என்னும் இருவினைப் பயனால் தத்தமக்குரிய பிறவி எடுத்து, தம் வினைகள் பயனைத் தரும் காலத்தில் தாம் செய்த வினைக்கு ஏற்ப இன்பமும் துன்பமும் அடைகின்றன. அதாவது, பழம்பிறப்பில் நல்லறம் செய்தவர்கள் அதற்கு அடுத்த பிறவிகளிலும் அதன் பயனைத் தொடர்ந்து அனுபவிப்பர் எனவும், நாம் செய்த தீவினைகளும் நம்மை அடுத்தடுத்த பிறப்புகளில் துரத்தும் எனவும் இவ்வரிகளின் வழி அறிய முடிகிறது. ஒவ்வொரு வினைக்கும் எதிர் வினை நிச்சயம் உண்டு. அது நாம் செய்த வினையைப் பொறுத்தே அமையும். ஒவ்வொரு மனிதனும் இப்பூமியிலிருந்து உடன்கொண்டு போவது அவனவன் செய்த வினைப் பயன்கள் மட்டுமே.

**நிலையாமை**

உலக வாழ்வு நிலையில்லாதது. நிலையற்ற இவ்வுலகில் வாழ்வோர் தாம் வாழும் காலத்திலேயே தம்மால் இயன்றவரை பிறருக்கு உதவி செய்து வாழவேண்டும். மற்றவர்களிடம் அன்புகாட்ட வேண்டும். பிற உயிர்களுக்குத் தீங்குசெய்தல் கூடாது என்பன போன்ற மனிதநேயக் கருத்துகளை மணிமேகலை எடுத்துரைக்கிறது.

*பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்*
*உறங்கலும் விழித்தலும் போன்றது, உண்மையின்*
*நல்அறம் செய்வோர் நல்உலகு அடைதலும்*
*அல்லறம் செய்வோர் அருநரகு அடைதலும்*
*உணடுஎன உணர்தலின் உரவோர் களந்தனர்* *(ஆதிரை பிச்சை இட்ட காதை 86-90)*

பிறந்தவர் இறப்பதும் இறந்தவர் பிறப்பதும் இயல்பு. இது உறங்குவது போலவும் விழிப்பது போன்றதுமாகும். நல்லறங்களைச் செய்து இறந்தபின் சுவர்க்கம் புகுவர், பாவம் செய்வோர் நரகம் செல்வர் என்பது நம்பிக்கை. ஆகவே, வாழும் காலத்திலேயே பாவம் ஒழித்து நல்லறம் செய்து புண்ணியம் காத்தல் அவசியம்.

*இளமையும் நில்லா யாக்கையும் நில்லா*
*வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா*
*புத்தேளுலகம் புதல் வருந்தாரார்*
*மிக்க அறமே விழுத்துணையாவது* *(சிறைசெய் காதை 135-138)*

இந்த உலக வாழ்வில் இளமை நிலையில்லாதது, யாக்கை (உயிர்) நிலையில்லாதது. மனிதன் தன் வாழ்நாளில் செய்யக் கூடிய அறமும் மனிதநேயமுமே என்றும் நிலைத்து நிறக் கூடியது.

**முடிவுரை**

மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ள பாத்திரம் பெற்ற காதையில், பசிப்பிணியின் கொடுமைகள் தெளிவாக விளக்கப்பட்டதோடு, அப்பிணியைப் போக்கும் செயல் மேன்மையானது என்றும் வலியுறுத்தி கூறப்பட்டுள்ளது. அதே வேளையில், இக்காதையில் பல அறக்கருத்துகள் இன்றைய வாழ்க்கை முறையோடு நெருங்கிய தொடர்பு உள்ளதைக் காண இயலுகிறது. மணிமேகலை வெறும் காலத்தால் அழியாத காப்பியமாகத் திகழாமல், இக்காப்பியத்தில் போதிக்கப்பட்டுள்ள அறக்கருத்துகளும் மனிதநேயக் கருத்துகளும் இன்றும் நாம் அனைவராலும் பின்பற்றக் கூடியதாகவே உள்ளன.

**துணைநூல்கள்**

சிதம்பரனார், சாமி. (1963). *மணிமேகலை காட்டும் மனித வாழ்வு.* சென்னை: ஸ்டார் பிரசுரம்.
சீனிவாசன், ரா. (1997). *மணிமேகலை மூலமும் திறனாய்வும்.* சென்னை: அணியகம் பதிப்பகம்.
சுத்தானந்த பாரதியார். (1959). *மணிமேகலை அமுதம்.* காரைக்குடி: செல்வி பதிப்பகம்.
தமிழ்த்துறை ஆசிரியர்கள். (1979). *மணிமேகலைச் சிந்தனைகள்.* சென்னை: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
துரைசாமிப் பிள்ளை, சு. (1942). *முப்பெருங் காவியங்களில் ஒன்றான மணிமேகலை ஆராய்ச்சி.* சென்னை: தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
*மணிமேகலை*, ந. மு. வேங்கடசாமி நாட்டார்.